[Mr. Speaker] [6th November 1965

question on that matter. Anyway, the hon. Member had his say in the matter. I withhold my consent to the hon. Member to raise this matter as an adjournment motion.

III.—STATEMENT BY MINISTER FOR FOOD *RE* CROP SITIUTION IN KANYAKUMARI DISTRICT.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக தாங்கள் அனுமதித்தால், நிலைமையை விளக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

Mr. SPEAKER : Yes, the Hon. Minister may make the statement.

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் நடந்ததையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்துக்கொள்ளாத காரணத்தால்தான் இந்த அட்ஜர்ன்மெண்ட் மோஷன் வந்திருக்கிறது என்று நினைக்கிறேன். அந்த ஜில்லாவில் பருவ மழை தவறிப்போன உடனே, அரசாங்கம் ஒன்றும் செய்யாமல் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டதுபோல் சென்ற வருஷமும், இந்த வருஷமும் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி போன்ற அணைகளிலே உள்ள தண்ணீரை இறைக்க வேண்டுமென்பதற்கான முயற்சியில், சூப்பரின்டென்டிங் எஞ்ஜினீயர் நிலையிலே மட்டுமல்ல, சீஃப் எஞ்ஜினீயரிங் கூட அங்கே போய் சில தினங்கள் தங்கியிருந்து இந்த முயற்சியிலே ஈடுபட்டிருந்தார்கள். நம்முடைய அரசாங்கத்தினுடைய கையிலே தண்ணீரை இறைக்கக்கூடிய பெரும் ராட்சத இயந்திரங்கள் இல்லாத நிலைமையிருந்தபோதிலும், பக்கத்திலே இருக்கிற கேரளா அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு, கொச்சியிலிருந்து ராட்சத இயந்திரங்களையெல்லாம் கூட அவர்கள் அனுப்புவதற்குத் தயாராக இருந்தார்கள். ஆனால், அதையெல்லாம் இங்கே கொண்டுவந்து பொருத்தி, அதன்மூலம் தண்ணீரை இறைப்பதற்குப் போதுமான நேரம், சந்தர்ப்பம் இல்லாத காரணத்தாலும், தண்ணீரை இறைத்தபோதிலும் அங்கேயுள்ள ஆயக்கட்டுகள் எல்லாவற்றையும் காப்பாற்றிவிட முடியுமா என்பது சந்தேகத்தில் இருந்த காரணத்தாலும் மேற்கொண்டு முயற்சியெடுக்க முடியவில்லை. இதைத்தவிர, இந்த டாம்களிலிருந்து தண்ணீரை இறைப்பதினால், ஒரு பகுதி தீய்ந்து போகாமல் காப்பாற்றப்பட்டாலும்கூட, கரையையொட்டி இருக்கக்கூடிய நிலங்கள் எல்லாம் 'விதர்' ஆகிவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் எல்லோரும் அந்த ஜில்லாவிலே என்ன என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதைப்பற்றி நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உதவிசெய்வதற்கு தன்னால் முடிந்ததையெல்லாம் செய்வதற்கு அரசாங்கம் ஒருபொழுதும் பின்தங்கியது கிடையாது. அதோடு மட்டுமல்லாமல் இந்த வருஷம் தொடர்ந்து விவசாயம் செய்யத் தண்ணீரை எந்த அளவுக்குப் பாதுகாத்துக் கொடுக்க

6th November 1965] [திரு. வெ. ராமைய்யா]

வேண்டுமோ, அதற்கு வேண்டிய தீவிர முயற்சியில் சீஃப் எஞ்ஜினீயரிங் இலாகா ஈடு பட்டிருக்கிறது. அதிர்ஷ்டவசமாக சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் நல்ல மழை பெய்யத் தொடங்கி இருக்கிறது. ஆகையினால், அந்த ஜில்லாவில் விவசாயம் இந்த ஆண்டு நல்ல முறையில் நடைபெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

IV—CALLING ATTENTION TO NON-CULTIVATION OF LANDS IN MADURAI AND RAMANATHAPURAM DISTRICTS.

திரு. செ. மாதவன் : கனம் சபாநாயகர் அவர்களே, பருவ மழை தவறியதன் காரணமாக, வைகை, பெரியாறு நீர்ப்பாசன முறைகளின் கீழ் வரும் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் பெருவாரியான நிலம் சாகுபடி செய்யப்படாமலிருப்பதும், மேற்படி அணைக்கட்டுகளிலிருந்து சாகுபடிக்காகத் தண்ணீர் விடுவதும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, the hon. Member has referred to the non-cultivation of a vast extent of land in Madurai and Ramanathapuram districts covered by the Vaigai and Periyar Irrigation Systems due to the failure of monsoon and regarding letting out of water from those anicuts for cultivation.

The Periyar Reservoir serves the ayacut in the Cumbum Valley and the Periyar Ayacut. The Vaigai Reservoir Project contemplates bringing under cultivation a new extent of 22,818 acres (under Tirumangalam Main Canal and Periyar New Extension) besides stabilising supplies to Vaigai Old Ayacut. The normal dates for allowing supplies to the Periyar Old Ayacut and new area under Vaigai Reservoir Project are as follows :—

Periyar ayacut :

(1) Double crop area in Cumbum Valley and Periyar Delta : —1st June.

(2) Single crop are in Cumbum Valley and Periyar ayacut —15th August.

Vaigai Reservoir Project : —

(3) Tirumangalam Main Canal—1st June.

(4) Periyar New Extension area—15th September.

For Vaigai Old ayacut under Vaigai river, the natural flows of Vaigai river after meeting the requirements of the Vaigai Old ayacut will be stored in the Vaigai Reservoir for allowing supplies as and when required in consultation with the Collector of Ramanathapuram district.